குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 55-2022

அ.சா. **11**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. மணிகன்டன்<br>(SSI of Police Bagalur PS) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.கிருஷ்ணன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 48 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 19.05.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது பாகலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். பாகலூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 486/2020 வழக்கு CC.No.55/2022 ஆக நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும். இவ்வழக்கில் புலன் விசாரணை

அதிகாரியான காவல் ஆய்வாளர் பழனிசாமி என்பவருடன் நான் ஏற்கனவே ஒன்றாக பணிப்புரிந்துள்ளதால் அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். அதனால் அவர் தாக்கல் செய்த இறுதி அறிக்கை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 06.08.2020ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் ரவிக்குமார் பாகலூர் காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்த போது நாராயணப்பா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண் 486/2020 இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் கோப்பை புலன் விசாரனைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் பழனிசாமி அவர்கள் அதே நாள் 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஆனந்த் மற்றும் லோகேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **பார்வை மகஜர் அ.சா.ஆ,5ஆகவும், மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே நாள் ஒசூர் அரசு மருத்துவமனையில் இவ்வழக்கில் இறந்த வசந்தகுமார் என்பவரின் உடலின் மீது பஞ்சாய்த்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் நாராயணப்பா, அஷ்வத் நாராயணன், அல்லேஷ், சிவசங்கரன், பஞ்சாயத்தார் சாட்சிகள் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் கதிரவன் என்பவரை விசாரித்து பெறப்பட்ட **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு விபத்தில் தொடர்புடைய வாகனங்களை ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பித்த மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து ஆய்வறிக்கையை பெற்றார். TN 70 B 0344 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் வாகனத்தின் மோட்டார் வாகன

ஆய்வாளர் அறிக்கை **அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 28.11.2020ம் தேதி பாகலுரில் 15.00 மணிக்கு எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்கநிலைய பிணையில் விடுவித்தார். பிரேத பரிசோதனை அலுவல் பார்த்த முதல் நிலை காவல் நாகரத்தினம், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் ரவிக்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கின் புகார்தாரர் புகார் அளிக்க சென்ற போது அவருடன் யார் யார் வந்தார்கள் என்றால் அதைப்பற்றி விவரம் குறிப்பிடப்படவில்லை. இந்த வழக்கில் இதச பிரிவு 279 யின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சட்ட பிரிவு எந்த குற்றத்திற்கான பிரிவு என்றால் வாகனத்தை அதிவேகமாக ஓட்டினால் அந்த சட்டபிரிவிற்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட டிராக்டர் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த போது அந்த வாகனத்தின் மீது JCB மூலம் இறந்து போன மாட்டை தூக்கி வைக்கும் போது டிராக்டர் வாகனம் பின்புறமாக வந்த போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆதனால் இந்த வழக்கில் இதச பிரிவு 279 கீழான குற்றச்சாட்டு பொருந்தது என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் புகார்தாரர் தனக்கு எதுவும் தெரியாது என சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. அ.சா.4 போலிசார் விசாரணையில் தான் JCB மூலம் இறந்து போன மாட்டை டிராக்டரில் எடுத்து வைத்துவிட்டு சென்று விட்டதாகவும் பிறகு தகவல் அறிந்து பிறகு 1 மணிக்கு சம்பவ இடத்தில் வந்து பார்த்தாக சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சிகள் இறந்த நபரின் உறவினர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில்

உள்ள குடியிருப்பு வாசிகள் யாரையும் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு விபத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு விபத்தின் போது எதிரி டிராக்டரை இயக்கவில்லை என்றாலும் எதிரி டிராக்டரை Hand Brack போட்டு நிறுத்தி வைத்திருந்தார் என்றாலும் JCB மூலம் மாட்டை டிராக்டரில் ஏற்றிய போது பலு தாங்காமல் டிராக்டர் பின்புறமாக நகர்ந்துவிட்டது என்றாலும் விபத்திற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும் சரியல்ல. இறந்து போன நபருக்கு விபத்து காப்பீடு பெறுவதற்காக எதிரியின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி டிராக்டரில் எந்த சேதமும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஒம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**